R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
June 2018



வேல்டு இவான்சலிசம் பைபில் ஸ்கூல் 3 வது பட்டமளிப்பு விழா சென்னை

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M & Our TV Program: Nambikkai TV Every Saturday 8.00 P.M & Tamilan TV Every Thursday 6.00 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

*Office Address*
*The Word of Christ, D/5 Rajan Nagar*
*Batlagundu -624202, DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi press, 14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202. Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 18 ஜூன் 2018 கனி 7

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:30 - 5:45 pm on 31 meter band on Sri Lanka radio.

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel


**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.

**Rajanayagam in Tamil:**
Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.




**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட், ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

**"Go ye into all the world, and preach the gospel to every creature"** - Mark 16:15
**"The Churches Of Christ Salute you"** Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 214

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. உயிரோடிருக்கிற எல்லாரைப் பார்க்கிலும் எனக்கு அதிக ஞானம் உண்டென்பதினாலே அல்ல என்று சொல்லி ராஜாவுக்கு அர்த்தம் சொன்னவன் யார்?
2. பிதா ஒருவர் தவிர மற்றொருவனும், பரலோகத்திலுள்ள தூதர்களும், அவருடைய குமாரனும் அறியாத நாள் எது?
3. இஸ்ரவேலர் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும் நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப்போய்விடுவேன் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
4. உன் சகோதரன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து நான் மனஸ்தாபப்படுகிறேன் என்றால் மன்னிக்கவேண்டுமா?
5. இஸ்ரவேலர் கர்த்தருடைய வசனத்தைத்தேட ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசைதொடங்கிக் கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும் அதைக் கண்டடையாமற்போவார்கள் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு பேசினார்?
6. அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்று எந்த சீஷனைப் பார்த்துச் சொன்னார்?
7. மீனின் வயிற்றிலிருந்து தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினவன் யார்?
8. தாவீது பரலோகத்திற்கு எழுந்து போனாரா?
9. அவர்கள் தேடிச் சேர்த்ததை நீ கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியைப் பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவருக்கென்றும், நியமிப்பாய் என்று யாருக்கு சொல்லப்பட்டது?
10. உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்ட வேண்டுமா?

**போட்டியாளர்கள் கவனிக்க...**

*ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி. ஆசிரியர்*

**இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்**

32

நாள்: 08.06.2018 வெள்ளிக் கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: S. வசந்தா, மேப்பல், முத்தூர் (P.O)
காளையார்கோவில் தாலுகா
நாட்டரசன் கோட்டை (வழி)
சிவகங்கை மாவட்டம்
தொடர்புக்கு:
B.அர்ஜுனன், 9443558041






சிறுவர் பகுதி

# பரிகாசம் – Mocking

-K.Mohan

வேதவாசிப்பு: 2இராஜாக்கள் 2:23-25

கர்த்தருக்குள் பிரியமான பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று நாம் பரிகாசத்தைக் குறித்துப் பார்ப்போம்.

மற்றவர்களை பரிகாசம் செய்வது கர்த்தருக்கு கொஞ்சமும் பிடிக்காது. அப்படியிருக்கும்போது மற்றவர்களை பரிகாசம் செய்யலாமா? கூடாது இல்லையா. எலிசாவின் நாட்களில் அவர் ஒருமுறை பெத்தேலுக்குப் போனாரு. வழியில் நடந்துபோகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து, எலிசாவைப்பார்த்து என்னசொன்னாங்கனு தெரியுமா? மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொல்லி நிந்தித்தாங்க. எதற்கு மொட்டத்தலையா ஏறிப்போ மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொன்னாங்கனா எலிசாவுக்கு முன்பாக இருந்த தீர்க்கதரிசி எலியா, அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டார். ஆகையால் இந்த பிள்ளைகள் எலிசாவையும் பார்த்து இப்படியாக சொல்லி கேலி செய்தாங்க. இப்படி செய்தா யாருக்குதான் கோபம் வராம இருக்கும்.

உடனே எலிசா என்ன செய்தாரு தெரியுமா? அவர் திரும்பி அந்தப்பிள்ளைகளைப் பார்த்து சபித்தார்; உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் வந்து அங்கே கூடியிருந்த பிள்ளைகளை பிறீப்போட்டது. ஏன் அப்படி கேலி செய்யனும் கேலி செய்ததால் தானே அந்தப் பிள்ளைகளை கரடி வந்து பிறீப்போட்டது. கேலி செய்யாம இருந்திருந்தால் எலிசா தாத்தா நல்ல கதைகளை சொல்லியிருப்பாரு, இல்லைனா ஒரு அற்புதம் செய்திருப்பாரு. பெத்தேலுக்கு வருவதற்கு முன்புதான் ஒரு அற்புதம் செய்தாரு அது என்ன வென்று தெரியுமா? சொல்றே கவனமா கேளுங்க. பட்டணம் குடியிருப்பதற்கு நல்லதா இருந்தது ஆனா அங்கே இருந்த தண்ணீர் கெட்டது, நிலமும் பாழ்நிலமாயிருந்தது. அப்பொழுது எலிசா ஒரு புதுத்தோண்டியை எடுத்து அதிலே உப்புப் போட்டுக் கொண்டுவாருங்கள் என்று சொன்னார் அந்தப்படியாக கொண்டுவந்தார்கள். எலிசா அந்த நீருற்றண்டைக்குப்போய், உப்பை அதிலே போட்டு இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லி அதை சரிசெய்தார். எப்படிப்பட்ட அற்புதம் பார்த்தீர்களா? தேவனுடைய அற்புதங்களை அறியாத இந்தப்பிள்ளைகள் எலிசாவை பரிகாசம் செய்ததால் 42 பிள்ளைகளை கரடி பிறீப்போட்டது. நாமும் தேவனுடைய மக்களை பரிகாசம் செய்யாது அவர்களுடைய ஆசீர்வாதமான வார்த்தைக்கு காத்திருப்போம்.

**மனப்பாட வசனம்**

**"பரியாசக்காரன் ஞானத்தைத் தேடியும் கண்டுபிடியான்;**
**புத்தியுள்ளவனுக்கோ அறிவு லேசாய்வரும்" - நீதிமொழிகள்14:6**




கட்டளையே விளக்கு,
வேதமே வெளிச்சம்,
போதகசிட்சையே ஜீவ வழி
(நீதிமொழிகள் 6:23)





தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 18 ஜூன் -2018 கனி - 7

ஆசிரியருரை

## அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்

## Many Walk Differently



**இ**ன்றைக்கு உலகத்திலே அவரவர் தாம் தெரிந்துகொண்ட வழியில் நடக்கிறார்கள். ஆனால் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன் ஒரே ஒரு வழியை மட்டும் ஏற்படுத்தியிருக்கிறார். அந்த வழி நித்திய வழியாக இருக்கிறது. அந்த வழி செல்லும்போது மனிதனுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். இதை அநேகர் அறியாமல் வேறுவிதமாய் நடக்கிறார்கள். இவர்களைப்பற்றி வேதம் நமக்கு போதிப்பது என்ன? " அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்குச் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன் " என்று அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதின நிருபத்தில் படிக்கிறோம் (பிலி.3:18). அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு பகைஞராகவே இருக்கிறார்கள். தேவனுடைய சித்தத்தை அறிந்தும் அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கலாத்திய சபையில் இருந்தார்கள். அவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும்போது; "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப் பட்டிருந்தாரே" என்கிறார் (கலா.3:1). இந்த சபையார் வேறுவிதமாக நடக்கிறதை அறிந்த பவுல் அவர்களை எச்சரிக்கத்தவறவில்லை. இன்றைக்கு நாமும் சத்தியத்திற்கு விரோதமாக போகின்ற ஜனங்களை எச்சரிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

சத்தியம் என்றும் மாறாதவைகளாகவே இருக்கிறது. அவைகளை சிலர் மாற்றிப்போதிக்கும்படியாக துணிந்திருக்கிறார்கள். சிலர் அறியாமையினாலே மாற்றிக் கைக்கொள்ளுகிறார்கள். எது எப்படியிருந்தபோதும் சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது. அதை ஒரு மனிதன் அறிந்துகொள்ளும்போது அந்த சத்தியம் அவனை விடுவிக்கும். மேலும், கொரிந்து சபையாருக்கு எழுதின கடிதத்தில் "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" என தெரியப்படுத்துகிறார் (1கொரி.1:23). இந்த யூதரும் கிரேக்கரும் தேடவேண்டியதை தேடாமல்; அடையாளத்தையும், ஞானத்தையும் தேடினார்கள். உலகத்திலே மனிதனை மீட்கும்படியாக தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். இப்படி வெளிப்பட்ட அவரையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்க மனமில்லாமல் உலக ஞானத்தையும் அடையாளங்களையும் தேடி மோசம்போனார்கள். இன்றைக்கும் அநேகர் இவ்விதமாக தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுடைய முடிவு அழிவு என்று நாம் காண்கிறோம். ஏனென்றால், அவர்கள் தேவனை அறிந்துகொள்ளும்படியாக முயற்சிக்கவில்லை; ஆகையால், "தேவனை அறியாதவர்களும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, ....ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" என காண்கிறோம் (2தெச.1:7-10). பலி சடங்காசாரங்களையும் பண்டிகைகளையும் கர்த்தர் எதிர்பார்க்கவில்லை. அவர் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற அனைவருக்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஒருவரும் சாக்கு போக்கு சொல்ல இடமில்லை. இந்த சுவிசேஷ வசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களும், இவைகளை மாற்றி போதிக்கிறவர்களும் தேவனுடைய கோபத்திற்குள்ளாவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு விரோதமாக தேவனுடைய கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக காண்கிறோம். "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (ரோம.1:18). இந்த கோபத்திற்கு ஒருவரும் தப்பிக்கொள்ள முடியாது. சத்தியத்தை அறிந்த ஒருநபர் சத்தியத்தின்படி வாழ வேண்டும். அதை மற்றவர்களுக்கும் எடுத்துச்சொல்ல வேண்டிய பொறுப்பு இருக்கிறது. இதை மறைத்து வைக்கவோ அல்லது மாற்றிபோதிக்கவோ அல்லது அவைகளை வேதாகமத்திலிருந்து நீக்கிவிடவோ யாருக்கும் அதிகாரம் இல்லை. ஆனால் பிரிவினை சபைபோதகர்கள் இதை அநியாத்தினாலே அடக்கிவைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சிலுவைக்கு பகைஞர்களாகவே இருக்கிறார்கள்.

"அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" இதைக்குறித்து பிலி.3:19-ல் வாசிக்கிறோம். கிறிஸ்தவத்திற்கு ஏற்றார்போல சிந்திக்காமல் அநேகர் வேறுவிதமாய் சிந்திக்கிறார்கள். குறிப்பாக சொல்லவேண்டுமானால் அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வயிறு தேவனாக இருக்கிறது. மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அநேகர் இவைகளை நோக்காமல் வீண் அலுவற்காரர்களாய் ஒழுக்கற்று திரிகிறார்கள். "அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களா யிருக்கிறார்கள்" என பவுல் குறிப்பிடுகிறார் (ரோ.16:18). கர்த்தருக்கு பயந்து ஊழியஞ்செய்கிறவன் கர்த்தருடைய வார்த்தைகளை போதிப்பான். தன்னுடைய வயிற்றுக்கு ஊழியஞ்செய்கிறவன். இச்சகப் பேச்சினாலும் நல்ல ஆத்துமாக்களையும் வஞ்சிக்கிறவனாயிருப்பான். ஆகையால் இப்படிப் பட்டவர்களை நாம் ஏற்றுக்கொள்ளாமலும் இவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருக்கவேண்டும். இப்படிப்பட்டவர்கள் தேவபகைஞராகவே இருக்கிறார்கள். தேமா என்று சொல்லக்கூடிய ஒரு சீஷன் இப்பிரபஞ்சத்தின்மீது ஆசைவைத்து கர்த்தருடைய ஊழியத்தைவிட்டு பின்னிட்டுப்போனான். இதை



அவள் தன்னிடமுள்ள யாவற்றையும் கொடுத்துவிட்டாள்.

1. வாழ்க்கை இந்தப் பெண்மணியிடம் தயையுள்ளதாயிருக்கவில்லை. தன் கணவனை அவள் அடக்கம் பண்ணிவிட்டாள் இப்போது வறுமையிலிருக்கிறாள்.

2. அவளிடம் அற்ப மதிப்புள்ள இரண்டு நாணயங்கள் மட்டுமே இருந்தன. அதையும் கர்த்தருக்கென்று கொடுத்து விட்டாள்.

அந்த நாணயங்கள் செம்பாலானவைகள் மற்ற உபயோகத்திலிருந்து மிகக் குறைந்த மதிப்புள்ளவைகள். அதனுடைய மதிப்பு தீர்மானிக்கப்பட கடினமானது. ஆனால் ஒரு பைசாவைவிடவும் குறைவானது.

3. அவள் வறுமையால் பாதிக்கப்பட்டு ஒன்றும் கொடுக்கப்படாத நிலையிலிருந்தாள்.

4. ஒரு நாணயத்தை தனக்கென்று எடுத்து வைத்திருக்கலாம்.

5. இருந்தபடியே தனக்கிருந்த எல்லாவற்றையும் எந்தவித முறுமுறுப்புமின்றி கொடுத்துவிட்டாள். அவள் நாணயங்களை மட்டுமல்ல தன் இருதயத்தையும் காணிக்கையோடு போட்டுவிட்டாள்.

இன்று நாம் செய்யக்கூடியவைகள்.

கிறிஸ்து ஆர்வமுடன் கவனித்துப் பார்த்தார். காணிக்கையை இயேசுவானவர் கவனித்தார்.

1.இதன் பொருள் ஒரு செயலை ஆர்வத்தோடும் ஒரு நோக்கத்தோடும் கவனிப்பதாகும். இயேசுவானவர் அடுத்தவர்கள் காரியத்தில் மூக்கை நுழைக்கவோ ஆர்வமுடையவராகவோ இல்லை.

2. தேவன் பார்த்து நினைப்பதைப் பற்றி யோசிப்பதை விட அநேகம் மனிதர்கள் என்ன யோசிப்பார்கள் என்பதிலே ஆர்வமாயிருந்தனர்.

3. பேதுரு கிறிஸ்துவிடம் சொன்னார். ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியும்... (யோவா.21:17).

4. "உன்னைக் காக்கிறவர் என்ற பாடலின் கடைசி சொற்றொடர் சொல்லுகிறது" எல்லாவற்றையும் காண்கின்ற ஒரு கண் உன்னைக் காக்கிறது.

5. நம்முடைய எல்லா செயல்களையும் கடவுள் காண்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் இன்று காலையில் காணிக்கை போடும்போது உங்களருகில் இயேசுவானவர் உட்கார்ந்திருந்தால் நீங்கள் எப்படி நினைப்பீர்கள்.

6. கொடுக்கப்படும் தொகையை கர்த்தர் காண்கிறார்.

பணக்காரர்களின் பெரிய அன்பளிப்பையும் ஏழைகளின் சிறிய அன்பளிப்பையும் கிறிஸ்துவானவர் பார்த்தார். எந்த அன்பளிப்பும் அவருடைய பார்வையிலிருந்து தப்பவில்லை.

தேவன் நாம் கொடுப்பதை விரும்புகிறார் கொடுப்பது நம் உதார குணத்தையும் தன்னல மற்ற தன்மையையும் காட்டுகிறது.

விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம் இவற்றைப் போல கொடுக்கவேண்டும் என்பதும் தேவனுடைய கட்டளை. கிறிஸ்துவானவர் பேசியதில் ஏறக்குறைய பாதியளவு மனிதனைப் பற்றியும் அவனுடைய உடைமைகளைப் பற்றியுமே

1. ஒரு சமயத்தில் கடமை, மரியாதை, தேசம் என்ற வார்த்தைகள் மிகவும் பிரபலமாயிருந்தன. கடமை என்கிற வார்த்தையை இனி நாம் கேட்கப் போவதில்லை. ஆனால் இன்னும் அது ஒரு நல்ல வார்த்தையே.

2. இந்த விதவைக்கு கொடுக்கவேண்டிய கடமையிருந்தது (உபா.16:10).

3. தேவனுக்கு கொடுக்கும் கடமையும் நமக்கு உண்டு. நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இல்லாதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்க கடவன் (1கொரி.16:2).

4. இந்தக் கடமை நம்முடைய சக சபை அங்கத்தினர்களைச் சார்ந்தல்ல. ஒரு பிரசங்கம் ஒருவரை தவறாகப் புரிந்துகொள்ளச் செய்யுமானால் அந்த நாளில் அவர் காணிக்கை கொடுக்கமாட்டார்.

## பாடம் -28
## மகா அன்பளிப்பு
**Greatest Gift**

*-Jerry*

**-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

1. சபையில் மிகச் சிறந்த அன்பளிப்பைக் கொடுப்பவர் யார்?

சிலர் அது நான் அல்ல நான் ஒரே நிலையான வருமானத்தை உடையவன் என்று சொல்லக்கூடும்.

நான் ஒரு கல்லூரி மாணவன் எனக்கு வேலையில்லை. அது நானாக இருக்க முடியாது. என்று சொல்லலாம்.

2. உதாரத்துவமாகக் கொடுத்தவர்களைப் பற்றிய மாதிரி புதிய ஏற்பாட்டில் அநேகம் உண்டு. பர்னபா தன் நிலத்தையெல்லாம் விற்றுக் கொண்டுவந்து கொடுத்தார். (அப்.4) மக்கெதோனியர்கள் தங்கள் சக்திக்கு மிஞ்சிக் கொடுத்தனர் (2கொரி.8). ஆனால் புதிய ஏற்பாட்டிலே காணிக்கை கொடுத்தவர்கள் இவர்கள் இருவருமல்ல. அந்த கனம் பெயர்கூட அறியப்படாத ஒரு விதவைக்குக் கொடுக்கப்படுகிறது. அவளுடைய சம்பவம் புதிய ஏற்பாட்டில் இரண்டு முறை சொல்லப்பட்டிருக்கிறது (லூக்.21:1-4; மாற்.12:41-44).

3. ஏரோதின் ஆலயத்தில் ஒரு கூட்டப் பெண்களடங்கிய காட்சி. அங்கே 13 காணிக்கைப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகள் எக்களாம் என்றழைக்கப்பட்டன. மேலே எக்காளத்தைப்போன்று குறுகலாகவும் கீழே அகலமாகவும் அவைகள் வடிவமைக்கப்படுகிறது. ஒவ்வொன்றிலும் வரும் காணிக்கை வெவ்வேறு வேலைக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பலிகளை தகிக்க விறகு வாங்குவதற்காக என்று ஒன்றிலும்.

ஒன்று பலிபீடத்தில் வாசனைத் திரவியங்களை புகைக்கவும்.

இன்னொன்று பொன்னாலான பாத்திரங்களை பராமரிக்கவும் இன்னும் பலவற்றிற்காகவும் பயன்படுத்தப்பட்டன.

5. இந்தக் காலகட்டத்தில் ஆலயத்தின் சொத்துக்கள் மிக அதிகமாக இருந்தன. பல நூற்றாண்டுகள் அப்படியிருந்தும் அநேகமாக அந்த ஐசுவரிங்கள் வீணடிக்கப்பட்டன.

6. இந்த எக்காளம் போன்ற காணிக்கைப் பெட்டிகளினருகேதான் அநேகமாக இயேசுவானவர் அமர்ந்திருந்தார். (மாற்.12:41). இந்தப் பெட்டிகளுக்குள் அநேகர் காணிக்கை போடுவதை இயேசு ஏறெடுத்துப் பார்த்தார்.

7. பிறகு அந்த ஏழை விதவை வருகிறாள். துயரமும், வறுமையும் தன் வாழ்க்கையில் கலந்துவிட்டவளாய் அது அவளை மிகவும் பரிதாபத்துக்குரியதாக காண்பிக்கும் நிலையில் வருகிறாள். காணிக்கை வித்தியாசப்படுத்தி காட்டப்படுகிறது.

ஐசுவரியவான்கள் அதிகம் கொடுத்தார்கள் அந்த நாளில் அநேக விரும்பி நோக்கும் செயல்களை அவர் கண்டார்.

1. அநேக ஐசுவரியவான்கள் அதிகமான அன்பளிப்புகளைக் காணிக்கைப் பெட்டியில் போடுவதைப் பார்த்தார். தேவனற்றவர்களுக்கு அனைத்து செல்வமும் இருப்பதில்லை. மேலும் சில ஐசுவரியவான்கள் தேவனுக்கென்று நேரம் ஒதுக்க முடிகிறது.

2. இந்த பணக்காரர்கள் உதாரத்துவமாகக் கொடுப்பவர்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இயேசுவானவர் அவர்களை கண்டனம் பண்ணவில்லை. பலர் எப்படி தாங்கள் கொடுப்பதில் தாராளமாக இருக்கிறார்கள் என்று பெருமையாக எண்ணினார்கள். மேலும் கடவுள் அவர்களைக் குறித்து பெருமைப்படுவார் என்றும் நினைத்தார்கள்.

அந்த ஏழை விதவை தன்னிடத்திலிருந்த இரண்டு வெள்ளிக்காசைக் கொடுத்துவிட்டாள். ஆண்களுக்கு இந்தத் தொகை மிகவும் குறைவானது. ஒரு நாள் கூலியில் 1/3 பாகம்.

எல்லா காணிக்கைகளை விடவும் இது மதிப்புள்ளது என்று கிறிஸ்துவானவர் சொல்கிறார். எல்லாவற்றையும் ஒன்று கூட்டினாலும் அனைத்தையும் விட மதிப்புள்ளது. ஏனென்றால்



பவுல் தீமோத்தேயுவுக்கு தெரியப்படுத்துகிறார் (2தீமோ.4:10). அநேகர் இந்தவிதமாக உலக காரியங்களை மையமாக வைத்து ஊழியம் செய்கிறவர்கள். உலகத்தாலே பிடிபட்டு கர்த்தருடைய ஊழியத்தை செய்யாமல் பின்னிட்டுப்போய்விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களைக்குறித்து நாம் கவனமாயிருக்கவேண்டும்.

அப்படிப்பட்டவர்களுடைய மகிமை அவர்களுடைய இலட்சையே என காண்கிறோம். "அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமா யிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள்" (தீத்.1:10,11). ஊழியம் என்பது பரிசுத்தமானது அழைக்கப்பட்டவர்களால் செய்யவேண்டிய ஒரு உன்னதமான பணியாகும். இதை சிலர் ஆதாய தொழிலாக எண்ணி செய்கிறார்கள். சிலர் பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தை புரியாமல் போதகர்களாக அதாவது நியாயப்பிரமாணபோதகர்களாக இருந்துகொண்டு தாங்கள் பேசுகிறது இன்னதென்றும் தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்து நியாயப் பிரமாணத்தைக்குறித்து மேட்டிமைகொள்ளுகிறார்கள். பண்டிகைகளையும், மாதபிறப்புகளையும் ஓய்வுநாட்களையும் முக்கியபடுத்தி ஜனங்களுக்கு ஏற்றாற்போல உபதேசித்து, வீணானவைகளை போதித்து மனதை மயக்குகிறவர்களாய் இருந்து கொண்டு, பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் அவர்கள் உட்புகுந்து அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். முதலாவது பிசாசு ஏதேன் தோட்டத்தில் உட்புகுந்து ஏவாளை வசப்படுத்தியதுபோல இவர்கள் பெண்களை இச்சகப்பேச்சினாலும், தங்களுடைய தந்திரத்தினாலும் அவர்களை வசப்படுத்துகிறார்கள். ஆகையால் இப்படிப்பட்டவர்களை, கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு வாயை அடக்கவேண்டும் என பவுல் நமக்கு உணர்த்துகிறார். இப்படிப்பட்டவர்களாலே அநேக குடும்பங்கள் வஞ்சிக்கப்பட்டு போகிறது. பிரிவினை சபைகள் வளர்ந்து பெருகுகிறது. இதற்கு முக்கிய காரணமே பிரிவினைவாதிகள்தான். அங்கே ஒழுங்கு கிடையாது எப்படிவேண்டுமானலும் ஜெபிக்கலாம், எப்படிவேண்டுமானாலும் பாடலாம், எப்படிவேண்டுமானாலும் நாம் கிறிஸ்தவர்களாக நடந்துகொள்ளலாம் என போதிக்கிறார்கள். ஆகையால் தாறுமாறாக ஓடுகிற பெண்ஒட்டகத்தைப்போல அவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் பெண்கள் அப்படிப்பட்டவர்களுடைய சபையில் அதிகமாக காணப்படுகிறார்கள். பெண்கள் பேசுவதற்கு அந்த சபையில் இடமளிக்கிறார்கள். ஆண்கள் இருக்கிற இடத்தில் பெண்களுக்கு பேசும்படி அதிகாரம் இல்லை. எந்த ஒரு பெண்ணும் சபையை குறிப்பாக ஆராதனை நடத்த அனுமதிக்கப்படவில்லை என காண்கிறோம். பரிசுத்த வேதாகமத்தில் நாம் எங்கும் காணமுடியாது. அப்படியிருக்கும்போது, எப்படி துணிந்து செய்ய முடியும்? இவர்கள் துணிகரமுள்ளவர்கள். இஸ்ரவேலரைப்போல வழிவிலகிப்போகும் இருதயத்தை உடையவர்களாக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிறார்கள் என பிலி.3:19-ன் கடைசி பகுதியில் படிக்கிறோம். ஆம், இன்று பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிற கூட்டம் அதிகமாக இருக்கிறது. உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லாத சதுசேயர் அந்நாட்களில் வாழ்ந்துகொண்டுவந்தார்கள். அவர்களுக்கு உயிர்த்தெழுதலிலும், தேவதூதர்களிலும் நம்பிக்கை இல்லை. ஆகையால் ஆண்டவர் இயேசுவை

பார்த்து இப்படிக்கேட்டார்கள்; "போதகரே, ஒருவன் மனைவியையுடைய வனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே, சகோதரர் ஏழுபேரிருந்தார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனான். பின்பு இரண்டாஞ்சகோதரன் அவளை விவாகம்பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறந்துபோனான். மூன்றாஞ்சகோதரனும் அவளை விவாகம்பண்ணினான் அப்படியே ஏழு பேரும் அவளை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக; இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண் கொண்டும் பெண்கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரி லிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண்கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்" (லூக்.20:28-36). பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கக்கூடியவர்கள் இந்த சதுசேயரைப்போலவே சிந்திக்கிறார்கள். நம் ஆண்டவர் சொன்னவைகளை நாம் நினைக்கவேண்டும்; "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்குத் வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்று குறிப்பிடுகிறார் (மத்.6:31,32). ஆகையால் அன்பானவர்களே பூமிக்குரியவைகளையல்ல மேலானவைகளை நாடுங்கள்.

**வேறுவிதமாய் நடக்கிறவர்களின் முடிவு என்ன?**

"நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்" (வெளி.22:15). இப்படிப்பட்டவர்கள் வேதாகமத்திற்கு புறம்பாக நடக்கிறவர்கள். இவர்களுக்காகவே நரகம் இருக்கிறது. புறம்பான இருள் அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒருக்காலும் வெளிச்சத்தை பார்க்காமல் இருளிலே தள்ளப்படுவார்கள். அங்கே நித்திய அழிவின் கூக்குரல் கேட்டுக்கொண்டே இருக்கும். யூதா இவர்களைக்குறித்து சொல்லும்போது; "இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்ளே மேய்த்துக்கொண்டார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" என்கிறார் (யூதா12,13). தமக்குக் கீழ்ப்படியாதவர் களையும், தம்முடைய வார்த்தைக்கு விரோதமாக நடந்தவர்களையும், வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறவர்களையும் தேவன் இந்த விதமான இடத்தில் ஒப்புக்கொடுப்பார். இவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். நீங்கள் வேறுவிதமாக சிந்திக்கிறவர்களாவும், நடக்கிறவர்களாவும் இருந்தால் இன்றே உங்களை மாற்றியமைத்துக்கொண்டு வசனத்திற்கு கீழ்ப்படியுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



வேலைகிடைக்காமல் கஷ்டப்படுகிறேனே என்று சொல்லி வாரத்தின் முதல் நாளை கர்த்தருடைய சமூகத்தில் செலவிட்டு தேவனை ஆராதிப்பதைத் தவிர்த்து உலகவேலையை நோக்கி ஓடுகின்றனர். கர்த்தருடைய நாளை இவர்கள் கொள்ளையடிக்கின்றனர். சகோதரியே, சற்று சிந்தியுங்கள் "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி.10:25). இல்லையெனில் கர்த்தருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும்.

**முதலாவது உயிர்த்தெழுதலை அறிவித்தவர்கள் (First To Proclaim Resurrection)**

கர்த்தருடைய தூதன், "சீக்கிரமாய்ப் போய், அவர் (இயேசு) மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குசொன்னேன் என்றான். அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்" (மத்.28:7,8). பொதுவாக ஒரு செய்தி வெகு சீக்கிரத்தில் பரவ வேண்டுமென்றால், பெண்களிடம் கூறிவிட்டால் போதும் பல இடங்களுக்கு மின்னல் வேகத்தில் அந்த செய்தி சென்றடைந்து விடும் என்பார்கள். ஸ்திரீகளுக்குள்ளே இந்தகுணம் இருக்கத்தான் செய்கிறது. அதனால் தான் என்னவோ, கர்த்தருடைய தூதன் இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை ஸ்திரீகளின் மூலம் சீஷர்களுக்கு அனுப்புகிறார். எப்படியோ, இந்த மாபெரும் நற்செய்தியை உண்மையான சந்தோஷத்துடன் மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் முதன் முதலாக சீஷர்களுக்கு அறிவித்தார்கள்.

சகோதரியே, நீங்கள் என்னநினைக்கிறீர்கள்? ஸ்திரீகளுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்கிறீர்களா? வேதவாக்கியங்களை தெளிவாகப் புரிந்துகொள்வோம். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; ...(1தீமோ.2:12) என்று வேதம் கூறுகிறது. வேதவாக்கியத்தின்படி நாம் உபதேசிக்கவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் அதிகாரத்தைப் பெறவில்லை. ஆனால் மத்.28:7,8-ன்படி கர்த்தருடைய அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கலாமே. கர்த்தருடைய காரியத்தில், கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கான காரியத்தில் ஈடுபடுவதில் முதலாவதாக இருப்போம்.

ஜெபியுங்கள்

**நீதிமான் செய்யும்**
**ஊக்கமான வேண்டுதல்**
**மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது - யாக்கோபு 5:16**



இம்மாத நடைபெறும் 32 வது வாசகர் கூட்டத்திற்காக...
பள்ளிசெல்லும் அனைத்துப் பிள்ளைகளுக்காக...
தமிழகத்தில் 32 மாவட்டங்களிலும் உள்ள வாசகர்களுக்காக...

இயற்கையான தாய் அன்பு மரியாளிடம் காணப்பட்டது என்று சொல்லலாம். ஆனால் மகதலேனா மரியாளிடம் எப்படி அந்த பூரண அன்பு காணப்பட்டது? இயேசு அவளிடமிருந்த ஏழு பிசாசுகளை அவளை விட்டு அகற்றியிருந்தார். பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டபடியினால் அவ்வாறு அன்பு கூர்ந்தாள். பிசாசின் பிள்ளையாயிருந்த அவள் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்பட்டாள். இது எப்பேர்பட்ட விடுதலை! அன்பு சகோதரியே, உங்களையும் கூட தேவன் தமது குமாரன் மூலமாக பிசாசின் கிரியைகளாகிய பல்வேறு பாவங்களிலிருந்து விடுவித்திருக்கலாம். விடுதலையின் சந்தோஷத்தை அனுபவிக்கின்ற நீங்கள் முடிவுபரியந்தம் இயேசுவின் மேல் அன்புகூர வேண்டியது அவசியமல்லவா? உலகத்தில் அன்புகூராதிருங்கள். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாயிருக்கிறது. உலக ஜனங்களுக்கு பயந்து கொண்டு அந்த சீஷர்களைப் போல் உங்களை ஒளித்துக்கொள்ளாதீர்கள். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது.

**முதலாவது கல்லறையினிடத்தில் இருந்தவள்** (First At The Tomb)

இயேசு அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் அதாவது வாரத்தின் முதல்நாளில் சுகந்தவர்க்கமிடும்படி கல்லறையினிடத்திற்கு மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் வந்தார்கள். ஆனால் "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார்" (மாற்.16:9). மற்ற ஒருவரும் முதல் முதல் இயேசுவை தரிசிக்காமல் மகதலேனா மரியாள் மட்டும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றதற்குக் காரணமென்ன? கல்லறையில் இயேசுவைக் காணவில்லை என்ற செய்தி அறிந்து, மற்ற சீஷர்களும் ஸ்திரீகளும் கல்லறையினிடத்திற்கு வந்து பார்த்து விட்டு மீண்டும் தங்கள் இடத்திற்குத் திரும்பிப் போய்விட்டார்கள் (யோவா.20:1-10). ஆனால் மகதலேனா மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள். இயேசுவின் மேல் அவள் கொண்டிருந்த அன்பினால் அவள் கல்லறையை விட்டு அகலாதிருந்தாள். அதனால் இயேசுவை முதல் முதல் தரிசிக்கும் பாக்கியம் பெற்றாள். அன்பு சகோதரியே, கர்த்தருடைய நாளிலே கர்த்தருக்கு சுகந்தவர்க்கமிட வந்தவள் கர்த்தரை தரிசித்தாள். நீங்கள் கர்த்தருடைய நாளிலே எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? சபையாகக் கூடி தேவனை ஆராதிக்கவா அல்லது இப்பிரபஞ்சத்தின் தேவனைப் பிரியப்படுத்தவா? சிந்தியுங்கள். இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் உலக சம்பத்தைக் காட்டி தன்னைப் பணிந்து கொள்ளும்படி தந்திரமாக செயல்படுவான் உங்களுடைய உலகப்பிரகாரமான தேவைகள், மற்றும் விருப்பங்களை அறிந்தவனாய் உங்களை மோசம்போக்கும்படி சுற்றித்திரிகிறான். இயேசுவையே வஞ்சிக்கத் திட்டமிட்டவன் உங்களை விட்டுவிடுவானா? மத்தேயு4:10,11-ல் இயேசுவைப் பார்த்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத்தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்" வேதவசனத்தினால் அவனை ஜெயித்தார். பிசாசு கிறிஸ்தவர்களையே குறிவைத்துள்ளான். ஞாயிற்றுக் கிழமை தான் சகல வைபவங்களும், தேர்வுகளும் நடைபெறுகின்றன. என்னசெய்வது எனக்கு



# விசுவாசிகளான தேவனுடைய பிள்ளைகளுக்கு பற்பல நிலையில் கழுகு ஒப்பனையாயிருக்கிறது

# கழுகு



*-Manickavasakam*

1. கழுகு கன் மலையில் வாசம் பண்ணுகிறது - யோபு 39:28
நமக்கு கன்மலை கிறிஸ்து - 1கொரி.10:4
2. கழுகு தன் செட்டைகளில் தன் குஞ்சுகளை சுமக்கிறது உபா.32:11
நமது ஆண்டவர் தமது பிள்ளைகளை சுமந்து காப்பாற்றுகிறவராயிருக்கிறார் - உபா.1:31
3. கழுகு கன்மலையின் சிகரத்தில் வாசம் பண்ணுகிறது யோபு39:28
கிறிதுவுக்குள் உன்னத ஜீவியம் செய்கிறதை காட்டுகிறது - எபே.2:7
4. கழுகு அரணான ஸ்தலத்தில் தங்கி வாசம் பண்ணுகிறது யோபு 29:28
அது பாதுகாப்பான ஸ்தலம் உத்தமனுக்கு கர்த்தர் பலத்த அரணாயிருக்கிறார் - சங்.31:2
5. கழுகு தூரப்பார்வையுள்ளது யோபு39:29
தேவனுடைய பிள்ளைகள் தூரப்பார்வையுள்ளவர்களாயிருக்க வேண்டும்
6.கழுகு மாம்சத்தை சாப்பிட்டு இரத்தத்தை உறிஞ்சும் யோபு 39:30
கர்த்தருடையவர்கள் அவருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் வாரந்தோறும் நினைவுகூருகிறார்கள் யோவா.6:53
7.கழுகு திரும்ப வாலவயதாகிறது சங்.103:5
தேவனுடய பிள்ளைகள் புது பெலனைப்பெற்று வாலிபனைப்போல் ஜீவிப்பார்கள் - ஏசா.40:31
8. கழுகு உயரத்தில் தன் கூட்டைக்கட்டுகிறது எரே.49:16
ஆவிக்குரிய ஜீவியம் செய்கிறவர்கள், தங்களுடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது என நம்புகிறார்கள் - 2கொரி.5:1
9.கழுகு ஆகாய மார்க்கமாய் பறக்கும் நீதி.23:5
தேவனுடைய ஜனங்கள் அவருடைய வருகையில் ஆகாய மார்க்கமாய் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் - 1தெச.4:16
10.கழுகு புதுப்பெலன் அடைந்து செட்டைகளை அடித்து எழும்பும் ஏசா.40:31
கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் அவ்விதமாக எழும்புவார்கள் - ஏசா.40:31

# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

-J.C.Choate

உங்களுக்கு நன்றி. மீண்டும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களிடத்தில் வருகிறேன்.

தற்போதைய இப்பாடங்களில் ஒரு உலகப்பிரகாரமான மனிதனுக்கும், ஒரு கிறிஸ்தவனாக மாறியிருக்கிறவனுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்பிக்க முயற்சிக்கின்றேன். நீங்கள் எப்பொழுதாவது இந்த வித்தியாசத்தைக் கண்டிருப்பீர்களென்றால் அதன்பின் கிறிஸ்து உங்களுக்காக மெய்யாகவே என்ன செய்ய இயலும் என்பதை நீங்கள் கண்டுகொள்ள முடியும் என நம்புகிறேன்.

நாம் நமது பாடத்தில் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து படிக்கையில் "களவு செய்தல்" என்பது குறித்து நாம் ஆலோசிக்க வேண்டியது அவசியம். இப்போது இதுபோன்ற விஷயத்திற்காக நாம் ஏன் நேரத்தைக் கழிக்கவிரும்புகிறோம். சாதாரணக் காரணத்திற்காக இது வேதாகமத்தில் அடிக்கடி பேசப்படுகிறது. ஏனென்றால் இன்று உலகத்தில் இது ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது.

மோசேயின் கட்டளையின் கீழ், பத்துக் கற்பனைகளில் "களவு செய்யாதிருப்பாயாக" (யாத்.20:15) என்பது ஒன்றாக இருந்தது. இவைகளில் ஏழு கற்பனைகள், உடைக்கப்பட்ட பொழுது, அவைகள் மரணத்தினால் தண்டிக்கப்பட்டது. கடைசி மூன்று இல்லாமல், களவு செய்யாதிருத்தல் என்பது அவைகளில் ஒன்றாக இருந்தது. எப்படியிருந்தாலும் இதன் அர்த்தம் களவு செய்யாதிருத்தல் என்பது ஒரு பெரிய குற்றமாகக் கருதப்படவில்லை என்பதல்ல.

ஒரு மனிதனுக்குச் சொந்தமல்லாத ஒன்றை எடுக்கிறபோது, மற்றொருவரிடமிருந்து ஏதோ சிலவற்றை எடுக்கிறதும் என்பது களவு செய்தலாகும். இது கொள்ளையிடுதல், திருடுதல், ஏமாற்றுதல், வஞ்சித்தல், மோசம்போக்குதல், பறித்துக்கொள்ளுதல் மற்றும் அதிகப்படியான விலை கூறி விற்றல் என்பதும் களவு செய்தலாயிருந்தது. இது பணம், நிலம் நகைகள், நேரம் மற்றும் ஒருவன் மற்றொருவனிடமிருந்து எதையெல்லாம் எடுக்க அதிகாரமில்லாதிருந்தும் அதை எடுத்தல் அல்லது அதற்காக கிரயம் செலுத்தாமலும், அதாவது ஏமாற்றுதல் மூலம் எடுக்கிறானோ அதுவே களவு செய்தல் ஆகும்.

யோசுவா புத்தகத்தில் யோசுவா இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் பேரை அனுப்பி எவ்வாறு ஆயி பட்டணத்தைத் தோற்கடிக்கலாம் என்று கண்டுவரும்படி செய்ததாக நாம் காண்கிறோம். சாதாரணமாக இஸ்ரவேலர் வெற்றி கொள்வதில் அனுபவசாலிகளாயிருந்திருக்கிறார்கள், ஆனால் இந்த விஷயத்தில் அவர்கள் தோல்வி அடைந்தார்கள். யோசுவா இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டபோது அவன் மிகவும் கலக்கமடைந்து தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு இதற்கான விடைக்காக கர்த்தருக்கு முன் அழுது கொண்டு கிடந்தான். அதற்குக் கர்த்தர் இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள், நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்; சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டதும், களவுசெய்ததும், வஞ்சித்ததும், தங்கள் பண்டம்பாடிகளுக் குள்ளே வைத்ததும் உண்டே என்றார்.

மேலும் கர்த்தர் சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து விலக்காதிருக்குமட்டும், நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக் கூடாது என்றார். அடுத்தநாள் யோசுவா அனைத்து ஜனங்களையும் வரவழைத்து, களவு செய்தவனை கண்டுபிடிக்கும்படி கோத்திரம் கோத்திரமாகவும், குடும்பம் குடும்பமாகவும் குற்றசெய்தவனையும் அவைகளில் அவன் எதை களவு செய்தான்



பெண்கள் பகுதி

# விசேஷித்த மேன்மை - *Special Distinction*

*-Glory Arjunan*



இன்றைய நாளில் பெண்கள் இப்பூமியிலும், விண்வெளியிலும் எத்தனை எத்தனையோ சாதனைகளைப் படைத்து மண்ணுக்கும் மகிமையைக் கொண்டு வருகின்றனர். சிலவருடங்களுக்கு முன் சுனிதா வில்லியம்ஸின் விண்வெளி சாதனை பூமியை வியக்கப்பண்ணினது. பெண்களாகிய நம்மெல்லோருக்கும் இது பெருமையை மாத்திரமல்ல எதையும் சவாலாக்கிக் கொள்ளும் ஊக்கத்தையும் அளிக்கிறது. இருந்தபோதிலும் அப்போஸ்தலனாகிய பேதுரு, “கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்... அவருடைய வாக்குத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்” (2பேது.3:10,13) என்று எழுதியிருக்கிறதை வாசிக்கும்போது எல்லாம் மாயை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. ஆம், எல்லாம் மாயை! “சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது” (பிர.1:14) என்கிறார் ஞானி சாலொமோன். இப்படியிருக்க அழிந்துபோகாத ஆவிக்குரிய காரியங்களைச் **(Spiritual Matters)** சிந்தித்து, அதைப் பற்றிக்கொண்டு, நீதிவாசமாயிருக்கும் புதிய இடத்திற்குச் செல்ல நம்மை ஆயத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவோம். இம்முயற்சிக்கு உதவியாக வேதாகமத்தில் விசேஷித்த இடத்தினைப் பிடித்துள்ள சில பெண்களை நமக்கு மாதிரியாகக் கொள்வோம்.

**சிலுவையின் கடைசிபரியந்தமும் (Last At the Cross) இருந்தவர்கள்:** இயேசுவின் சிலுவைப் பயணத்தில் கடைசிமட்டும் இயேசுவோடு இருந்தவர்கள் மகதலேனா மரியாளும் யோசேயின் (இயேசுவின் தாய்) தாயாகிய மரியாளும்தான். இயேசுவோடு உண்டு உறங்கி ஊழியஞ்செய்த இயேசுவின் சீஷர்களெல்லாரும் ஓடிவிட்டனர். ஆனால் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனாகிய யோசேப்பு என்பவன் ஒரு கனம்பொருந்திய ஆலோசனைக்காரன், இவன் வந்து இயேசுவின் சரீரத்தைப் பெற்று, மெல்லி துப்பட்டியை வாங்கிக் கொண்டு வந்து, மரித்த இயேசுவை சிலுவையிலிருந்து இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்து இவ்விதமாக அடக்கம்பண்ணினான். “அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்” (மாற்.15:47). அப்படியானால் இந்த ஸ்திரீகள் கல்லறைவரைக்கும் சென்றிருக்கிறார்கள். ஆனால் சீஷர்களோ பயந்து தங்களை ஒளித்துக்கொண்டார்கள். “பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்” இயேசுவின்மேல் முழுமையான அன்பு கொண்டிருந்ததால் அந்த இரு ஸ்திரீகளும் கல்லறை வரை சென்றார்கள். ஒருவேளை இயேசுவின் தாய் என்பதால்

வளர்ந்துள்ளன நாகரிகங்கள் பெருகியுள்ளன, மேலும் தேவனோடுள்ள நித்திய வீட்டிற்கென ஆயத்தமாக்கப்பட்டுள்ளன. இது என்றென்றும் உருவாக்கப்பட்டுள்ள மிக முக்கியமான மனிதனுடைய ஸ்தாபனமாயிருக்கிறது. தேவன் இதனுடைய ஸ்தாபகர், மனுஷர்- விவாகரத்தின் மூலம், அல்லது மனநிலை பாதிக்கப்படுவதின் மூலம், உலகத்திற்கு ஒத்த நிலை வெளிப்படுகையில் உணர்ச்சி வயப்பட்ட பிரிவினையின் மூலம் வீட்டை அழிக்கத் தீர்மானத்தை உருவாக்குகிறான்- இவைகள் மனுஷருக்காக ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய உண்மையான சித்தத்திற்கு விரோதமாக இருக்கின்றன.

நீங்கள், திருமணம் போராட்டத்திற்கு தகுதியானது எனத் தீர்மானித் திருப்பீர்களென்றால் திரும்பிச்சென்று உங்களுடைய தீர்மானத்தினை மறுஆய்வு செய்யுங்கள். நீங்கள், உங்களுக்காகவும் உங்களுடைய துணைக்காகவும், விவாகரத்து மற்றும் விவாகமான நிலை-அல்லது யாரோ ஒருவரோடே வருங்கால முறையற்ற விவாகம் போன்றவற்றை தெரிந்து கொள்ளுகின்றீர்கள். இது தேவனால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, மேலும் நீங்கள் இப்பேர்ப்பட்ட கீழ்ப்படியாத நிலையில் இரட்சிக்கப்பட முடியாது. விவாகம் கிரியை நடப்பிக்கும் மேலும் இது எவ்வித முயற்சிகள் எடுத்தாலும் மகிமையான சந்தோஷத்தைக் கொண்டுவரும்.

**இலங்கை ஆசியசேவை SW 25 மேற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.30 முதல் 5.45 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

**நடப்புச்செய்திகள்**

- ❒ 7,500 கிலோ வாகனங்களை இயக்க 'பேட்ஜ்' தேவையில்லை என அரசு உத்தரவிட்டுள்ளது.
- ❒ ஈராக்கில் ஐ.எஸ் தீவிரவாத அமைப்போடு தொடர்புடைய 300 க்கும் மேற்பட்டோருக்கு மரண தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- ❒ காஷ்மீர் சிறுமி படத்தை வெளிட்ட ஊடகங்களுக்கு ரூ 10 லட்சம் அபராதம்.

**தெரிந்துகொள்வோம்** *-K.R.K.Ravi Asir*

▶ அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆண்ட்ரூ ஜாக்ஸனின் கல்லறையில், அவர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார் என்பதே குறிப்பிடப்படவில்லை.

▶ தனது கல்லறையில் 'நான் ஒரு தமிழ் மாணவன்' என்று எழுதிவைக்க வேண்டும் என்று கூறியவர் ஜி.யு.போப்.

▶ டாக்ஸி ஓட்டுநர்கள் டாக்சி ஓட்டும்போது பயணிகளிடம் பேசக்கூடாது இது ஜெர்மனியில் இன்றளவும் நடைமுறையில் உள்ள சட்டம்.

▶ மாஜினி, தன் நாட்டிற்கு (இத்தாலி) சுதந்திரம் இல்லாதது மரணத்திற்கு இணையானது என்று எண்ணி துக்கத்திற்கு அடையாளமாக தன் வாழ்நாள் முழுவதும் கறுப்பு உடையையே அணிந்து வாழ்ந்தார்.



என்பதையும் கண்டுபிடிக்கும்வரை வரவழைத்தான். கடைசியாக, யோசுவா இச்செயலை புரிந்த ஆகானைக் கண்டுபிடித்தான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன்; இன்னின்ன பிரகாரமாகச் செய்தேன் என்று அறிக்கையிட்டான். பின்பு அப்போது யோசுவா இஸ்ரவேலரெல்லாருங்கூடச் சேராகின் புத்திரனாகிய ஆகானையும், அந்த வெள்ளியையும் சால்வையையும் பொன்பாளத்தையும், அவன் குமாரரையும் குமாரத்திகளையும், அவன் மாடுகளையும் கழுதைகளையும் ஆடுகளையும், அவன் கூடாரத்தையும், அவனுக்குள்ள யாவையும் எடுத்து, ஆகோர்பள்ளத்தாக்குக்குக் கொண்டுபோனார்கள். அங்கே யோசுவா: நீ எங்களைக் கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார் என்றான்: அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியில் சுட்டெரித்து, கற்களினால் மூடி" (யோசு.7:24,25) என வாசிக்கிறோம். இப்போது வழக்கத்திற்கு மாறான இந்த திருட்டு, ஆகானும் அவனுடையவர்களும் கல்லெறிந்து, அவனுடைய பயங்கரமான குற்றத்தினிமித்தம் எரிக்கப்பட்டார்கள். ஆகான் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக அங்கிருந்த உடமைகளை எடுத்துக் கொண்டதே இஸ்ரவேலர் ஆயி பட்டணத்திற்கு எதிராகச் செல்லுகையில் அவர்கள் தோல்வியடைய காரணமாயிருந்தது. அவர்கள் தங்களுடைய முகாமை விட்டு பாவத்தை அகற்றும்போது மட்டுமே கர்த்தர் இஸ்ரவேலரிடமாகத் திரும்பி அவர்களுடைய பகைவர்களை ஜெயிக்க சித்தமுள்ளவராகவும் உதவிசெய்கிறவருமாகவுமிருந்தார்.

லூக்கா10:25-37-ல் நாம் நல்ல சமாரியனைப் பற்றிய கதையை அறிகிறோம். இயேசு எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போன ஒரு மனிதனைப் பற்றி சொன்னார். அவன் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி குற்றுயிராக விட்டுப்போனார்கள். பிறகு அதன் வழியாக வந்த ஆசாரியன் மற்றும் லேவியனும் அவனைக் கண்டு பக்கமாய் விலகிப்போனார்கள். பிறகு ஒரு சமாரியன் அவ்வழியே வந்தான். இந்த சமாரியன் யூதர்களால் எதிரியாகக் கருதப்பட்டவன், ஆனால் இருந்தபோதிலும் அவன் மேல் இரக்கப்பட்டு, அவனுடைய காயங்களைக் கட்டி, அவனைப் பராமரிக்கும்படி சத்திரத்திற்கு எடுத்துச் சென்றான். இயேசுவின் காலத்தில் கள்ளர்கள் இருந்தது சர்வசாதாரணமாகும்.

**-தொடரும்**

**பொது அறிவு சோதனை**

1. **முதல் அணுசக்தி நீர் மூழ்கி கப்பல் எந்த நாட்டில் உருவாக்கப்பட்டது?**
   அ)பிரான்சு ஆ)சீனா இ)அமெரிக்கா
2. **சந்திரன் ஒரு முறை தன்னைத்தானே சுற்றிக் கொள்ள எவ்வளவு காலம் எடுத்துக்கொள்ளும்?**
   அ)இருபது நாட்கள் ஆ)முப்பது நாட்கள் இ)இருபத்தெட்டு நாட்கள்
3. **இரண்டாவது உலகப்போர் எப்போது முடிவுக்கு வந்தது?**
   அ)14-8-1945 ஆ)8-6-1945 இ)1-10-1944
4. **எரியும்போது வெண்மையான சுடரை கொடுக்கும் உலோகம் எது?**
   அ)இரும்பு ஆ)தாமிரம் இ)மெக்னீசியம்
5. **இந்திய அரசியல் சட்டத்தில் சிறப்பான இடத்தை பெறுபவர் யார்?**
   அ)பிரதமர் ஆ)ஜனாதிபதி இ)கவர்னர்

**விடைகள்:**
1.அமெரிக்கா
2.முப்பது நாட்கள்
3.14-8-1945
4.மெக்னீசியம்
5.ஜனாதிபதி

பெண்கள் பகுதி

## தசமபாக காணிக்கை
## நியாயப்பிரமாண காலபோதனையேயன்றி
## கிருபையின் கால சத்தியமல்ல

-S.Chandra Janaki

சொன்ற மாத இதழின் தொடர்ச்சி

எபி.7:12. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால் நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும். லேவி கோத்திரத்தில் ஆசாரியரானவர்கள் தங்களின் பாவங்களுக்காக முதலில் பலி செலுத்த வேண்டும். மேலும் ஒருவர் பின் மற்றொருவராக ஆசாரியர்கள் மாறுவார்கள். ஆனால் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி புதிய ஏற்பாட்டுக்கால ஆசாரியரான இயேசுகிறிஸ்து குற்றமற்றவர், பரிசுத்தர், தன் பாவங்களுக்காக முதலில் அவர் பலி செலுத்தவேண்டுவதில்லை. எபி.5:6; 7:20 ; சங்110:4 இவ்வசனங்களில் நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று இருப்பதால் அவரே நமக்கு மாறாத ஒரே பிரதான ஆசாரியராயிருக்கிறார். நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்படுகிற பலிகள் பூரணப்படுத்த முடியாமலிருப்பதால் திரும்ப திரும்ப பலி செலுத்தப்படுகிறது. எனவே நியாயப்பிரமாணம் எதையும் பூரணப்படுத்தவில்லை என தெரிகிறது.

உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்ற ராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள். இதைத்தான் ஐசுவரியவானான வாலிபனிடம் உணர்த்தி காட்டினார் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து.

தசமபாக காணிக்கை செலுத்துங்கள் என்ற பூர்வத்தாருக்கு கொடுக்கப்பட்ட பிரமாணம் இயேசுவின் சிலுவை மரணத்தால் கொலோ.2:11, எபே.2:15 இல்லாமற்போய்விட்டது. அவனவன் மனதில் நியமித்தபடியே ஏழை விதவை செலுத்தியதைப்போல, விருப்பமாக முதற்பலனை செலுத்தலாம் தன் விருப்பம்போல காணிக்கை செலுத்தலாம். கொலோ.2:14 நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின் மேல் ஆணியடித்துப் போட்டார். எனவே நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் என வேதம் சொல்லுகிறது. மேலும் கலா.2:21 நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.

எனவே நீதியை நடப்பியுங்கள், இணக்கமுள்ளவர்களாயிருங்கள், சமாதானத்தை நாடுங்கள், நன்மைசெய்யுங்கள், தான தர்மம் பண்ணுங்கள், தரித்திரரை தாங்குங்கள். அந்நியரை உபசரிக்க நாடுங்கள். இவைகளை நாம் கைக்கொள்ளவேண்டுமென திரும்ப திரும்ப அழுத்தம் திருத்தமாக எழுதப்பட்டுள்ளதை கவனியுங்கள்.

"…நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்"
ரோமர் 3:19

**உங்கள் கவனத்திற்கு…**



"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து…… அதற்காக ஒப்புக்கொடுத்தார். …….. அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்து காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். …….. அந்தப்படியே, உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்".

இவ்வசனங்கள் தேவன் திட்டமிட்ட முன்னேற்பாடாயிருக்கிறது என்பதை தெளிவாக விளக்குகின்றன. தலைவனாகக் கருதப்படும் புருஷனானவன் குடும்பத்தில் அன்புகூருகிற தலைவனாயிருக்கும்போதும், மனைவி தன் புருஷனிடத்தில் அன்புகூர்ந்து பயபக்தியாயிருக்கும் போதும், எல்லாவகையிலும் தங்களை 'ஒரே' மாம்சமாக மாற்றுவதற்கு ஒப்படைக்கும் போதும், அவர்கள் ஒரு சீரிய, உயர்ந்த உறவினைக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் உலகத்தில் மிகக் குறைந்தவர்களே "பூரணமாக இருக்கின்றனர். இருவேறுபட்ட மக்களுடைய இணைப்பு- ஒவ்வொரு தோற்றத்திலிருந்து வேறுபாடு, ஏனென்றால் ஒருவர் ஆண் இன்னொருவர் பெண்-மேலும், ஏற்றுக்கொள்ளுதல், அவர்கள் ஒரு முழுமையில் இருபாதியாக இருக்கும்படி நிச்சயிக்கப்பட்டுள்ளார்கள், ஆனால் முழுமையானது உண்மை, தொடர்ச்சியான அன்பு, மன்னிக்க முயல்வது போன்றவற்றின் மூலம் மட்டுமே போய்ச் சேருகிறது. அவர்கள் வித்தியாசமான சூழல்களையும், வித்தியாசமான மதிப்பீடுகளையும், இலக்குகளையும், மேலும் வித்தியாசமான சமய அர்ப்பணிப்புகளையும் கூட கொண்டு வருகிறார்கள். அவர்கள் அனுபவமின்மையையும், முதிர்ச்சியடையா நிலையினையும் கூட விவாகத்திற்குள் கொண்டு வருகிறார்கள். இந்த எல்லாக் காரியங்களும் பிரச்சனைகளுக்கும், தவறான புரிந்துகொள்ளுதலுக்கும், மனவேதனைகளுக்கும் காரணமாகி, முடிவாக நிதானமான, "திருமணம் போராட்டத்திற்கு தகுதியுடையதா?" என்ற வினா எழுப்பவும் செய்கிறது.

இன்று பலர் விவாகத்தை 'எழுதலும் வீழ்தலும்' ஆன பலபரீட்சையைப் போல எண்ணுகின்றனர். விவாகம் "செயல்பட" வில்லையென்றால் பிறகு விவாகரத்து என்பது எளிதான தெரிந்து கொள்ளுதலாயிருக்கிறது. இவ்விதமான நினைவு ஒப்புக்கொடுத்தலின் அஸ்திபார மனநிலையை நீக்குகிறது. மிகச் சில மனித உறவுகள் பலவருடங்களாக ஒப்புக்கொடுத்தல் மட்டுமல்லாது விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, முடிவிலே உறவினைக் காத்துக்கொள்ளும்படியான தீர்மானம் போன்றவற்றினை தொடருகின்றன.

இதுவே விவாகத்தில் உண்மையாயிருக்கிறது. தேவன் திட்டமிட்ட விவாகம் மனித உறவுகளின் அஸ்திபாரத்தூணாக இருக்கிறது. விவாகத்தினுள் ஒரு குடும்பத்தார் பிறந்துள்ளனர், குடும்பங்கள் கட்டப்பட்டிருக்கின்றன, தேசங்கள்

பெண்கள் பகுதி

# திருமணம் போராட்டத்திற்கு தகுதியானதல்ல

## Marriage is not worth the struggle

-Betty




ஆதியிலே, ஆதியாகமம்1 மற்றும் 2-ன்படி, தேவன் வானத்தையும், பூமியையும் மேலும் சகலவித உயிருள்ள விருட்சங்களையும், மிருகங்களையும் மட்டும் சிருஷ்டிக்கவில்லை மாறாக அவர் தம்முடைய சுயசாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள தம்முடைய சிருஷ்டியை முடிசூட்டினார்: ‘‘பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; …….. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் …… இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்’’ (ஆதி.1:26,27; 2:24).

இயேசுவின் ஊழியநாட்களில், அவர் விவாகம் மற்றும் விவாகரத்து குறித்து கேள்வி கேட்கப்பட்டு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்’’(மத்.19:4-6).

மோசேயின் கட்டளையின் கீழ் தள்ளுதற்சீட்டைக் கொடுத்து விவாகரத்து செய்ய அனுமதிக்கப்பட்டதைக் குறித்து, இயேசு, ‘‘உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்க வில்லை. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்’’(மத்.19:8,9).

புருஷன்/மனைவி உறவின் நெருக்கத்தைப்பற்றிய இன்னொரு விளக்கத்தினை, நாம் எபேசியர்5:22-33-ல் வாசிக்கிறோம், ‘‘மனைவிகளே, கத்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப்புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; ……. ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.



# சந்தோஷத்திற்கான சாவி

## The Key To Happiness

-Jerry



அநேகமாக ஒவ்வொரு கலாச்சாரத்திலும் ஒவ்வொருவரும் தேடுகின்ற மனநிலையே சந்தோஷமானதுதான். நான் கண்டறிந்திருக்கிறதான ஒவ்வொரு ஆய்விலும் அதிகமாக மக்களின் முக்கிய நோக்கம் சாதாரணமாக மகிழ்ச்சியுடன் இருப்பதே ஆகும். இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் மகிழ்ச்சியுடன் இருக்கவே விரும்புகின்றனர். உறவு முறையில் சிலர் உண்மையாக இந்த இலக்கை அடைகிறவர்கள் சிலர் என்பதைக் காண்பிக்கிறது. ஆம், அநேகர் சந்தோஷமான நேரத்தை பெற்று, அநேகவற்றை அடைந்து, தற்காலிக சந்தோஷத்தை அடைந்து வெளிப்பிரகாரமாக மிக ஆசீர்வாதத்தை அடைய விரும்புகின்றனர். இருந்தபோதிலும் உள்ளான மனதில் அதிருப்தியில், நம்பிக்கையற்ற நிலையில் அல்லது நிலையற்ற தன்மையில் நிறைந்துள்ளனர். உலகம் எண்ணற்ற சந்தோஷமற்ற ஜனங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் ஏன் இப்படிப்பட்ட சந்தோஷத்தைக் தேடுகின்றனர்?

பதில் மிக எளிதானது. மக்கள் சந்தோஷத்தை கெட்ட இடங்களில் அல்லது தீய வழிகளில் தேடுகின்றனர். நம்மில் அநேகர் சந்தோஷத்தை உலக செல்வத்தில் காணமுடியும் என நினைக்கிறோம். எப்படியும், உலக செல்வம் நிலையான சந்தோஷத்தை கொண்டுவராது. பணக்கார மற்றும் புகழ்பெற்றவர்களின் வாழ்க்கைகளைப் பாருங்கள். அவர்கள் எல்லாவற்றையும் கொண்டவர்களாக காணப்படுவார்கள் - புகழ், அதிர்ஷ்டம். அவர்கள் கற்பனை செய்யமுடியாத மிக ஆடம்பர சூழல்களில், அதாவது விலையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்துகிறார்கள், மேலும் வீணாக செலவுசெய்கிற விருந்துகளில் களிக்கிறார்கள். வாழ்க்கை அவர்களுக்கு நல்லதைப் போல காணப்படுகிறது. ஆயினும், வெளிப்படையாக அவர்கள் பேசும்போது அவர்கள் தங்களுடைய வாழ்க்கைகள் இவ்வாறு காணப்படுகிறதைப் போல் அல்ல என்று சொல்ல இடமளிக்கின்றனர். மன அழுத்தத்தோடு மது அருந்துவதோடு, பிறர்கண்ணில் படாத நிலையை விரும்புவதோடு, திருமண பிரச்சனைகள், குழந்தையை வளர்க்கும் பிரச்சனைகள் போன்ற பலவற்றோடு அவர்களுடைய போராட்டங்களை வாசிக்கிறோம். அவர்கள் அடிக்கடி ஒரு பிரச்சனையிலிருந்து இன்னொரு பிரச்சனைக்குள்ளாவதை சாதாரணமாகக் காணமுடிகிறது. நிச்சயமாக இது சந்தோஷத்திற்கான சாவியல்ல.

இப்படிப்பட்ட கட்டுபாடில்லாத வாழ்க்கை முறை சந்தோஷத்தில் தேவையற்ற விளைவைக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள், ஆனால் நிச்சயமாக சாராசரிக்கு மேலான வருமானமும் வாழ்க்கை முறையும் இலக்கை அடையலாம். பல வருடங்களாக ஒரு மனிதன் போதுமான வசதியாக வாழ்வதற்குரிய செல்வத்தை உடையவனாயிருக்கிறான்,

எனவே அவனால் வாழ்வை அனுபவிக்கவும் சந்தோஷமாக இருக்கவும் முடிகிறது. ஒருவன் கிட்டதட்ட ஒருபோதும் "போதும்" என்றிருப்பதில்லை என்பதே பிரச்சனையாயிருக்கிறது. அவனுடைய வருமானம் கூடுகையில் அவனுடைய தேவைகளும், விருப்பங்களும் கூடுகிறது. ஒருவனுடைய வருமானம் அதிகமோ அல்லது குறைவோ அவன் தெரிந்து கொண்ட தேவையான வருமான அளவு அவன் சம்பாதித்துக் கொண்டிருந்த வருமானத்தைக் கொண்டு வசதியான வாழ்க்கை முறையை இரட்டிப்பாக வாழ்ந்து கொண்டிருந்தான் என கருதவில்லை என்று ஒரு ஆய்வு முடிவுசெய்கிறது! இப்படியாக உள்ளான மனதிருப்தி மற்றும் சந்தோஷம் நாம் புரிந்துகொள்வதைக் காட்டிலும் எப்போதும் நியாயமானதாகத் தோன்றும்.

யோவான் 13-ல் இயேசு நமக்கு நிலையான சந்தோஷத்திற்கான சாவியைக் கொடுக்கிறார்; எப்படியென்றால், இது மனிதன் பார்ப்பதிலிருந்து முழுவதும் வேறுபட்டிருக்கிறது. நாம் அழைக்கிறதான "பஸ்கா பண்டிகையின்" போது, இயேசு தமது நினைவு விருந்தினை ஸ்தாபிக்கும் போது, வெளிப்படையாக தம்முடைய சீஷர்களிடம் தாம் சீக்கிரமாக மரிக்கப் போகிறேன் என்று சொன்னார். உண்மையாகவே, இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அவர் மரிப்பார் இப்படியாக பந்தியிலிருக்கும் போது, நினைத்து பார்க்காததை இயேசு செய்தார். அவர் வஸ்திரங்களை கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக்கொண்டு, சீஷருடைய கால்களைக் கழுவினார். அந்த நாட்களில், ஜனங்கள் சந்தன மரத்தாலான செருப்புகளை அணிந்தார்கள். அவர்களுடைய பாதங்கள் அழுக்கான பாதைகளில் அவர்கள் நடக்கையில் அழுக்காக மாறும். இப்படியாக ஒரு விருந்தளிப்பவரும் விருந்தாளிகளுடைய பாதங்களை கழுவி விடுவார், இது மிகவும் தன்னை தாழ்த்துகிற செயல். விருந்தளிப்பவர் அடிமைகளைக் கொண்டபோதுமான வசதிபடைத்தவராக இருப்பாரென்றால், இச்செயல் ஒரு அடிமையினால் செய்யப்பட்டது. இக்காரியத்தில், அங்கே விருந்தளிப்பவர் இல்லை, சீஷர்களில் ஒருவர் கூட பாதங்களைக் கழுவும்படி தங்களைத் தாழ்த்த முன்வரவில்லை. அதன் விளைவு அந்த அறையே பெருமையுள்ள இருதயங்களாலும் அழுக்கான கால்களாலும் நிறைந்திருந்தது. இயேசு பிறகு எழுந்து அவர்கள் பின்பற்றும்படி மாதிரியைக் கற்றுக்கொடுத்தார். இராஜாதி இராஜா இந்த தாழ்மையான செயலை செய்து நிறைவேற்றினார். 21-ம் நூற்றாண்டில் மற்றவர்களுக்கு சேவை செய்யும்படி சமநிலையில் உள்ளவர்களாயிருக்கும்படி விரும்புகின்றனர் - அவர்கள் யாராயிருந்தாலும் பராவாயில்லை, எவ்வளவு விலையானாலும் பரவாயில்லை, இந்தச் செயல் எவ்வளவு சந்தோஷமற்ற செயல்.

சந்தோஷத்திற்கான சாவி யோவான் 13:17-ல் காணப்படுகிறது. "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்". பாக்கியவான்கள் என்பதற்கு கிரேக்க மொழியில் கஷ்டம் என சரியாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சந்தோஷம் என்பதன் அர்த்தத்திற்கு மிக நெருக்கமான வார்த்தை உள்ளான சந்தோஷம், இது வெளிப்படையான சூழலைச் சார்ந்துள்ளது அல்ல என விவரிக்கப்பட்டுள்ளது. இயேசு மெய்யான சந்தோஷம் அடுத்தவர்களுக்கு சேவை செய்வதில் மட்டுமே காண முடியும் என நமக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். இது நமக்கு உணர்வைக் கொடுக்கிறதில்லை. நாம் ஒரு வேலைக்காரனாக இருப்பதிலிருந்து சந்தோஷத்தைப் பெறமுடியும் என நினைப்பதில்லை. இதற்கு எதிர்மறையானது அதிகமதிகமான உணர்வை நமக்குக் கொடுக்கிறது. ஆனால் அப்படியல்ல, தேவசித்தத்தின்படியே.



இயேசுவும் கூட, "உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" (மத்.23:11) என்றார்.

நாம் எவ்வாறு இந்த மனநிலையைப் பெற முடியும்? அன்பு ஒன்றே உந்து சக்தியாகும். எவ்வித காரணமுமின்றி நாம் செய்வோம் என அன்பில்லாமல் நாம் காரியங்களைச் செய்ய முடியும். யோவான் 13:1-ல் இயேசு தம்முடைய சீஷர்களை கடைசி வரை நேசித்தார். அவருடைய அன்பு அளவற்றதாக இருந்தது என்பதை நாம் காண்கிறோம். மேலும், யோவான் 13;3-ஐ கவனியுங்கள் இந்த சுருக்கத்தில், இயேசு இம்மனநிலையைப் பெற மூன்று காரியங்களைக் கொண்டிருக்கும்படி அனுமதித்தார் என்பதை நாம் கூறலாம். **அவர் தாம் யார் என்பதை அறிந்திருந்தார். அவர் தேவனுடைய குமாரன் என்பதை அறிந்திருந்தார். அவர் எங்கிருந்து வந்தார் என்பதை அறிந்திருந்தார். அவர் தாமே பரலோகத்தின் மகிமைகளை விட்டு விட்டார் என்பதை அறிந்திருந்தார்.** மேலும் அவர் எங்கே செல்லுகின்றார் **என்பதையும் அறிந்திருந்தார்.** அவர் மறுபடியும் பிதாவோடு கூட என்றென்றும் வாழும்படிக்குச் சென்று கொண்டிருந்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த மூன்று காரியங்களை அறிந்திருக்கிறோம். நாம் ஒரு சமயம் பாவத்தில் அழிந்தவர்களாயிருந்தோம் என்பதை அறிவோம். இப்போது நாம் தேவனுடைய புத்திர சுவிகாரர்களாக ஆகிவிட்டோம் என்பதை அறிவோம். மேலும் நாம் தேவனுடைய வாரிசாக அவரோடுகூட இணைந்திருக்கப்போகிறோம் என்பதையும் அறிவோம். இது நம்மை மிகவும் பலமுள்ள ஜனங்களாக இந்த பூமியில் உருவாக்கும். மற்றவர்களுக்கு சேவை செய்யும்படி மாத்திரமே தனித்தனியாக மிகவும் பலமுள்ளவர்களாயிருக்கும்படி நம்மை தகுதிப்படுத்தும்.

சந்தோஷத்திற்கான சாவி இதுவென்று மற்றவர்களும் கூட உணருகிறவர்களாயிருப்பார்கள். ஆல்பர்ட் ஸ்வர்ட்ஷர் ஒரு உலக புகழ்பெற்ற பாடகரும் தத்துவஞானியுமாவார். தனது 30 வது வயதில் மருத்துவ கல்லூரியில் நுழைந்தார். பட்டம் பெற்றபின், அவர் கேபன், ஆப்பிரிக்காவுக்குப் பயணம் செய்து தனது வாழ்வில் மீதமுள்ள நாட்களை அதிகமாக மருத்துவத்தேவையிலிருக்கும் ஜனங்களுக்கென்று செலவு செய்து சேவைசெய்தார். அவர் 1952-ம் ஆண்டு நோபள் பரிசு பெற்று அவர் பெற்ற பணத்தை ஆப்பிரிக்காவிலுள்ள தனது மருத்தவமனையை விரிவுபடுத்த பயன்படுத்தினார். சந்தேகமில்லாமல், அவர் தியாகம் செய்து, ஆப்பிரிக்கக் காடுகளில் பல கஷ்டங்களை சந்தித்து, கடினமான வாழ்வு வாழ்ந்தார். அவர் தனது வாழ்வு முடியப்போகும் சமயத்தில் கூறிய கூற்று: "உங்களுடைய விதி எப்படியிருக்கும் என எனக்குத்தெரியாது, அனால் ஒன்றை நான் அறிவேன்; உங்களில் எவன் ஒருவன் சேவை செய்யும் வழியைத்தேடி கண்டுபிடிப்பானோ அவனே உண்மையான சந்தோஷமுடையவனாயிருப்பான்" என்றார்.

இன்று உண்மையிலேயே நீங்கள் சந்தோஷமாயிருக்கிறீர்களா? தாழ்மையான சேவையில் அந்த சாவி கண்டுபிடிக்கப்படுகிறது. அதற்கும் மேலாக, இந்த சாவி ஒவ்வொருவருக்கும் உபயோகப்படுத்தக்கூடியது. நீங்கள் பணக்காரரோ அல்லது ஏழையோ, படித்தவரோ அல்லது படிக்காதவரோ, எந்த நாட்டவரோ என்பது முக்கியமல்ல. சந்தோஷம் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் அன்பினிமித்தம் விருப்பத்துடன் சேவை செய்வதினால் வருகிறது. ஒவ்வொருவரும் விரும்புகின்ற ஒரு வேலைக்காரனாக வாழும் போது நீங்கள் உள்ளான சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மனதிருப்தியையும் கண்டு கொள்ளுவீர்கள். எனவே இது வல்லமையுடைய தேவனின் வாக்குத்தத்தம். இதை நீங்கள் நம்புவீர்களா?